# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 3, பவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

## 1995, மார்ச் 17, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல் "

பயன் இல்லாத சொற்களைப் பலமுறையும் சொல்கிற ஒருவரை மனிதன் என்று சொல்லக்கூடாது. நெல் மணிகளுள் கலந்துவிட்ட பதர் போன்று அவர் கருதப்பட வேண்டும். (குறுக்கீடு) பயன் இல்லாத பேச்சுக்களை இன்று யாரும் பேச மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் - விடைகள். வினா எண் 41, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

**41—**

**சிறு சேமிப்புத் துறையில் முகவர்களை நியமித்தல்**

*37574—**திரு. கா.பூ. முனுசாமி :**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[*1995 மார்ச் 17*

சிறு சேமிப்பில் அதிக தொகை வசூலிக்க சேமிப்பு முகவர்களை அதிகமாக நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த சிறு சேமிப்புத் துறையில் அதிகமாக நிதி வசூலிக்கிற பட்சத்தில் புதிய வரிகளே போடாத அளவுக்கு இங்கே அரசு நடத்தலாம் என்ற குறிப்பை கேள்வி நேரத்தில் கூறி இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் விவசாயிகளும் தினக்கூலிகளும் இந்த சிறு சேமிப்புத் துறையில் பணம் போடுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலுள்ள எல்லா தரப்பினரும் இந்த சிறு சேமிப்புத் துறையில் பங்கு கொண்டு அவர்கள் ஓரளவுக்கு பணத்தை சேமிக்க வேண்டுமென்ற தன்மையில்தான் 11 வகையான திட்டங்கள் வகுக்கப்பட்டு அவரவர்களுடைய வாழ்க்கைத்தரம், வாழ்க்கை வசதி, வருமானம் ஆகியவற்றையொட்டி ஏதேனும் ஒரு திட்டத்தை மேற்கொள்ளலாம் என்ற அளவுக்குத் தரப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்லாமல் முகவர்களுக்கும் நாம் ஊக்கத் தொகையும் தருகிறோம். மத்திய அரசு ஒரு சதவீதமும் மாநில அரசு ஒரு சதவீதமும் தருகிறது என்பது மட்டுமல்லாமல், 500 ரூபாய்க்கு மேல் ஒவ்வொரு 500 ரூபாய்க்கும் முதலீடு செய்கிறவர்களுக்கு நாம் 2 சதவீதம் ஊக்கத் தொகை தருகிறோம். அதைத் தவிர 619-க்கு மேற்பட்ட ஒரு இலட்சம் பரிசுச் சீட்டுகள் சேர்ந்தவுடன் குலுக்கல் முறையில் நாம் பரிசுகளும் வழங்கிக் கொண்டு வருகிறோம். எந்தெந்த வகையில் ஆக்கமும் ஊக்கமும் வழங்கி வர முடியுமோ அதை இந்த அரசு செய்து கொண்டு வருகிறது. அதன் காரணமாக ஆண்டுக்காண்டு சிறு சேமிப்புத் தொகையினுடைய அளவு வளர்ந்து கொண்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கின்ற மாணவர்கள் இந்த நல்ல பழக்கத்தில் ஈடுபட அந்தந்தப்

*1995 மார்ச் 17*]

பள்ளியினுடைய தலைமையாசிரியரை முகவராக்கவும், அதேநேரத்தில் மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் தனிப்பட்ட முறையில் சிறப்புப் பரிசுகள் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களை ஊக்குவிக்கிற முறையில் சஞ்சயிக்கா திட்டம் என்கிற பெயரில் பல்வேறு பள்ளிகளில் இது நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. சில பள்ளிகளில் நூற்றுக்கு நூறு மாணவ மாணவிகளும் இதில் பங்கு பெற்று இருக்கிறார்கள். அப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பான முறையில் பள்ளிகளில் சிறு சேமிப்புத் தொகையை சேர்த்துத் தருகிறவர் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பல்வேறு பரிசுகள் எல்லாம் வழங்குகிறோம். மின் விசிறிகள், அந்தப் பள்ளிக்குத் தேவையான இரும்பு பீரோக்கள் போன்றவைகளை எல்லாம் அந்தப் பள்ளியை ஊக்குவிக்கவும், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் திரட்டித் தருகிற அந்தந்த பள்ளியினுடைய தலைமை ஆசிரியர் போன்றவர்களுக்கும் நாம் ஊக்கத் தொகை மற்றவற்றை தந்து வருகிறோம். இப்போது பரவலாக மாணவர்களிடத்தில் அப்படி ஒரு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தினுடைய அடிப்படையில் இந்தத் திட்டம் பரவலாக்கப்பட்டு வருகிறது. ஆண்டுக்காண்டு பல்வேறு பள்ளிகள் இதிலே முனைந்து ஈடுபட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி.கே. சின்னசாமி.

**திரு. வி.கே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்புத் துறையில் ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் சேமிப்புக்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு ஊக்கத் தொகையாக, இன்சென்ட்டிவாக வருடா வருடம் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். அதை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அவசரகாலப் பணிகளுக்காக, தேவையான குடிநீர் வசதி, சாலை வசதி போன்ற முக்கிய பணிகளுக்காக செலவு செய்து வந்தார்கள். அது தற்சமயம் நிறுத்தப்பட்டுள்ளது என்று சொல்கிறார்கள். அது உண்மையா ? அப்படி இருந்தால், மீண்டும் அதைத் தொடர்ந்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

[1995 மார்ச் 17

முற்பகல் 10-05

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் சிறுசேமிப்பை அந்தந்த மாவட்டத்தில் ஈட்டித் தருவார்களானால், அவர்களுக்கு என்று ஊக்கத்தொகை நாம் தந்து வருவது நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து தந்து கொண்டு வருகின்றோம். அந்த வகையிலே கிட்டத்தட்ட 10 லட்சம் ரூபாயிலிருந்து 75 லட்சம் ரூபாய் வரையிலும் அந்தந்த மாவட்டத்தினுடைய தன்மைகளுக்கு ஏற்ப கொடுக்கப்பட்டு வருகின்றது. எந்த வகையிலும் நிறுத்தப்படவில்லை என்பது மட்டுமல்லாமல் அவர்களுக்கு என்று நிர்ணயிக்கிற அந்தத் தொகைக்கு மேலே அந்த மாவட்டத்தினர் திரட்டித் தருவார்களானால், அந்த வகையிலே அவர்களுக்குக் கேடயமும் வழங்குகின்றோம். அந்த வகையிலே எந்தெந்த மாவட்டங்கள் இதிலே முனைப்புள்ளத்தோடு இருந்து பாடுபட்டு வருகின்றனவோ அவற்றுக்குக் கேடயங்கள் வழங்குவது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்த ஆண்டு கூடுதலாக அவர்களுடைய டார்கெட் போக வேண்டும் என்பதால் 40 சதவீதம் கூடுதலாக டார்கெட் ஆக்கப்பட்டு இருக்கிறதே தவிர, அவர்களுக்கு வழங்கிற அந்தத் தொகை நிறுத்தப்படவில்லை. இதுதான் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஊக்கம் அளிக்கும் என்ற வகையில் இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்புத் திட்டத்திலே மக்கள் அதிகமான ஆர்வத்தோடு இருக்கிறார்கள். அதேபோல் அதிகாரிகளும் ஆர்வத்தோடு சிறுசேமிப்பைச் சேர்ப்பதிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். இப்போது 40 சதவீதம் டார்கெட்டை திடீரென்று மார்ச் மாதத்தில் ஏற்றி, எல்லா அதிகாரிகளுக்கும் கொடுத்து இருக்கிறார்கள். மேலும் இந்த மார்ச்சில் குறிப்பாக, இப்போது ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற அதிகாரிகள் ஜே.வி.வி.டி. போன்ற வேலைகளை எல்லாம் முடிக்கக்கூடிய கட்டாயத்தில் இருக்கிறபோது, இந்தப் பணியும் ஒரு பெரிய சுமையாக அவர்களிடம் ஏறியிருப்பதைத் தவிர்த்து இருக்கலாம். இதனால் அந்த அதிகாரிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிரந்தரப் பணியையும் செய்ய முடியாமல், இதிலேயும் கவனம் செலுத்த முடியாமல் அவதிப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*1995 மார்ச் 17*]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று எந்த ஒரு குற்றச்சாட்டும் வரவில்லை. யாரிடத்திலிருந்தும் இப்படிப்பட்ட எந்த ஒரு கோரிக்கையும் வரவில்லை, என்பது மட்டுமல்லாமல், இப்போது நல்லதொரு ஊக்கம் எங்கு பார்த்தாலும் ஏற்பட்டிருப்பதினுடைய விளைவாக இந்த ஆண்டு அதிகமான அளவிற்குச் சேர்க்க முடியும் என்ற காரணத்தினுடைய அடிப்படையிலே தான், 40 சதவீதம் என்று போட்டிருந்த டார்கெட்டை விட கூடுதலாக ஆக்கப்பட்டது. ஆனால் பல மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறு சேமிப்புத் துறையிலே ஈடுபட்டு இருக்கிற அதிகாரிகள் ஆகியவர்களுடன் நான் கலந்து பேசுகின்றபோது, 40 சதவீதம் கூடுதலாகப் போட்ட டார்கெட்டையும் தாங்கள் நிறைவேற்றிட முடியும் என்றுதான் பெரும்பாலான மாவட்டங்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றன. இந்த ஆண்டு கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய் அளவிற்கு எல்லா மாவட்டங்களும் இந்த சிறுசேமிப்புத் தொகையை ஈட்டித் தரவேண்டும் என்று டார்கெட்டை நாம் விதித்து இருந்தாலும், என்னுடைய கணக்கு, இப்போது இருக்கிற சூழ்நிலைகள், மற்றவை காரணமாக 700 கோடிக்கு மேல் இந்த ஆண்டு கிடைக்கும். இந்த மார்ச் 31 முடிந்ததற்குப் பிறகு நல்லதொரு சூழ்நிலை ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த அளவிற்குத் தாராளமாகவும் ஏராளமாகவும் பல பேர்கள் சிறுசேமிப்புத் தொகையில் கட்ட வருகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அப்படிப்பட்ட பணிகளுக்குக் குந்தகம் ஏற்படுகிற வகையிலோ, அல்லது ஆங்காங்கு நடைபெறுகிற வளர்ச்சிப் பணித் திட்டங்கள் மற்றவைகளுக்குக் குந்தகம் ஏற்படுகிற வகையிலோ எந்த ஒரு நிகழ்ச்சியும் ஏற்படவில்லை. இதை மாவட்ட ஆட்சித் தலைவர்களே கண்காணித்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

**42—**

**அணியாபுரம் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குதல்**

**10100*—**திருமதி ப. சரஸ்வதி:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தாலுகா, அணியாபுரம் கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தில் பிற்பட்ட வகுப்பினரைச் சார்ந்த வீடற்ற நிலமற்றவர்களுக்கு வீட்டுமனை நிலமும், பட்டாவும் வழங்க அரசு முன்வருமா ?